# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஆறாம் பத்து

## ஐந்தாம் திருவாய்மொழி - துவளில்
## தோழி தாய்மாரை நோக்கிக் கூறும் பாசுரத்தாலே, ஆழ்வார் தாம் எம்பெருமானிடத்து ஈடுபட்டமையைப் பேசுதல்

** துவளில் மா மணி மாடம் ஓங்கு *
தொலைவில்லி மங்கலம் தொழும்
இவளை * நீர் இனி அன்னைமீர்! * உமக்கு
ஆசை இல்லை விடுமினோ **
தவள ஒண் சங்கு சக்கரம் என்றும் *
தாமரைத் தடங்கண் என்றும் *
குவளை ஒண் மலர்க் கண்கள் நீர் மல்க *
நின்று நின்று குமுறுமே 1

குமுறும் ஓசை விழவொலித் * தொலைவில்லி
மங்கலம் கொண்டு புக்கு *
அமுத மென் மொழியாளை * நீர் உமக்கு
ஆசை இன்றி அகற்றினீர் **
திமிர் கொண்டால் ஒத்து நிற்கும் * மற்றிவள்
தேவ தேவ பிரான் என்றே *
நிமியும் வாயொடு கண்கள் நீர் மல்க *
நெக்கொசிந்து கரையுமே 2

கரை கொள் பைம்பொழில் தண் பணைத் * தொலைவில்லி
மங்கலம் கொண்டு புக்கு *
உரை கொள் இன் மொழியாளை * நீர் உமக்கு
ஆசை இன்றி அகற்றினீர் **
திரை கொள் பௌவத்துச் சேர்ந்ததும் * திசை
ஞாலம் தாவி அளந்ததும் *
நிரைகள் மேய்த்ததுமே பிதற்றி *
நெடுங்கண் நீர் மல்க நிற்குமே 3

நிற்கும் நான்மறை வாணர் வாழ் * தொலைவில்லி
மங்கலம் கண்ட பின் *
அற்கம் ஒன்றும் அற உறாள் * மலிந்தாள்
கண்டீர் இவள் அன்னைமீர்! **
கற்கும் கல்வி எல்லாம் * கருங்கடல்
வண்ணன் கண்ண பிரான் என்றே *
ஒற்கம் ஒன்றும் இலள் * உகந்து உகந்து
உள் மகிழ்ந்து குழையுமே 4

குழையும் வாண்முகத்து ஏழையைத் * தொலைவில்லி
மங்கலம் கொண்டு புக்கு *
இழை கொள் சோதிச் செந்தாமரைக் கண்
பிரான் * இருந்தமை காட்டினீர் **
மழை பெய்தால் ஒக்கும் கண்ண நீரினொடு *
அன்று தொட்டும் மையாந்து * இவள்
நுழையும் சிந்தையள் அன்னைமீர்! * தொழும்
அத்திசை உற்று நோக்கியே 5

நோக்கும் பக்கம் எல்லாம் * கரும்பொடு
செந்நெல் ஓங்கு செந்தாமரை *
வாய்க்கும் தண் பொருநல் * வடகரை
வண் தொலைவில்லி மங்கலம் **
நோக்குமேல் அத்திசை அல்லால் * மறு
நோக்கிலள் வைகல் நாள் தொறும் *
வாய்க் கொள் வாசகமும் * மணி வண்ணன்
நாமமே இவள் அன்னைமீர்! 6

அன்னைமீர்! அணி மா மயில் * சிறு
மான் இவள் நம்மைக் கை வலிந்து *
என்ன வார்த்தையும் கேட்குறாள் *
தொலைவில்லி மங்கலம் என்றல்லால் **
முன்னம் நோற்ற விதி கொலோ? *
முகில் வண்ணன் மாயங்கொலோ? * அவன்
சின்னமும் திரு நாமமும் * இவள்
வாயனகள் திருந்தவே 7

திருந்து வேதமும் வேள்வியும் *
திரு மா மகளிரும் தாம் * மலிந்
திருந்து வாழ் பொருநல் * வடகரை
வண் தொலைவில்லி மங்கலம் **
கருந்தடங்கண்ணி கை தொழுத *
அந்நாள் தொடங்கி இந்நாள் தொறும் *
இருந்து இருந்து அரவிந்த லோசன! *
என்றென்றே நைந்து இரங்குமே 8

இரங்கி நாள் தொறும் வாய்வெரீஇ * இவள்
கண்ண நீர்கள் அலமர *
மரங்களும் இரங்கும் வகை *
மணி வண்ணவோ! என்று கூவுமால் **
துரங்கம் வாய் பிளந்தான் உறை * தொலைவில்லி
மங்கலம் என்று * தன்
கரங்கள் கூப்பித் தொழும் * அவ்வூர்த்
திரு நாமம் கற்றதற் பின்னையே 9

பின்னை கொல்? நில மா மகள் கொல்? *
திரு மகள் கொல்? பிறந்திட்டாள் *
என்ன மாயங்கொலோ? * இவள் நெடுமால்
என்றே நின்று கூவுமால் **
முன்னி வந்து அவன் நின்று இருந்து உறையும் *
தொலைவில்லி மங்கலம்
சென்னியால் வணங்கும் * அவ்வூர்த்
திரு நாமம் * கேட்பது சிந்தையே 10

** சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் *
தேவ பிரானையே *
தந்தை தாய் என்று அடைந்த * வண் குருகூரவர்
சடகோபன் **
முந்தை ஆயிரத்துள் இவை * தொலைவில்லி
மங்கலத்தைச் சொன்ன *
செந்தமிழ் பத்தும் வல்லார் * அடிமை
செய்வார் திருமாலுக்கே 11

**அடிவரவு:** துவளில் குமுறு கரை நிற்கும் குழையும் நோக்கும் அன்னை திருந்து இரங்கி பின்னை சிந்தை மால்

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**